# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032.
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0438/2016

ஆணை எண்: 155/2016

நாள்: 04/10/2016

ஊர் பொதுமக்கள்,
தென்தாமரைக்குளம்,
கன்னியாகுமரி மாவட்டம். – மனுதாரர்

செயல் அலுவலர்,
தென்தாமரைக்குளம் பேரூராட்சி,
அகஸ்தீஸ்வரம் தாலுகா,
கன்னியாகுமரி மாவட்டம். – எதிர்மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், தென்தாமரைக்குளம் பேரூராட்சி பொதுமக்கள் சார்பாக பெறப்பட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டு 0438/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:–

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், தென்தாமரைக்குளம் பேரூராட்சி பொதுமக்கள் சார்பாக பெறப்பட்ட முறையீட்டு மனுவில் கீழ்க்கண்டவாறான புகார்களை தெரிவித்துள்ளனர்:–

தென்தாமரைக்குளம் பேரூராட்சி ஊர் பொதுமக்கள் தங்கள் பேரூராட்சி செயல் அலுவலர், பொறியாளர் மற்றும் சில நபர்களுடைய சுயலாபத்திற்காக பேரூராட்சிக்குட்பட்ட புவியூர் சானல் கரை முதல் எட்டுக்கூட்டுத் தேரிவிளை வரையில் உள்ள சாலையை சரி செய்ய ரூ.25 இலட்சம் ஒப்பந்த ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான ஏரியா போதாது எனக் கருதி மேற்படி ரூ.25 இலட்சத்திற்காக வேண்டி கடந்த 18.04.2011–ல் தென்தாமரைக்குளம் தெப்பக்குளம் ரோடு போட்டு முடிக்கப்பட்ட ரோட்டின் ஒரு பகுதியை வேண்டுமென்றே மீண்டும் இடித்தும், கலைத்தும் போட்டுள்ள செயல்பாட்டால் அரசுக்கு இழப்பீடு ஏற்படுத்தி உள்ளதுடன் அந்த பணத்தினை வேறு

பல நல்ல திட்டங்களுக்கு பயன்படுத்திடலாம் என்று தெரிவித்து இது போன்று பஞ்சாயத்திற்கு உட்பட்ட பல சாலைகளையும் சேதப்படுத்தி அரசுக்கு மிகுந்த இழப்பீடு ஏற்படுத்தியுள்ளனர் என்பதை இந்த மனு மூலம் தெரிவித்துள்ளனர்.

இப்புகார் மனு மீது 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகள், விதி 9–ன் படி முறைமன்ற நடுவம் அறிவிப்பாணை எண்.0438/TPT/2016, நாள் 24.05.2016ன் வாயிலாக செயல் அலுவலரின் விளக்க அறிக்கை கோரப்பட்டது. செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் புகார் மனுவில் தெரிவித்தவாறு ரூ.25 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டதாகவும், இப்பணியினை செய்து முடிக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டதாகவும் மேற்படி வேலைக்கான மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு உரிய விதிமுறைகள் பின்பற்றி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை ஆணை வழங்கப்பட்டு சாலை பணி முடிக்கப்பட்டுள்ளதாக செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இப்பணியானது 3.00 மீட்டர் அகலத்திலும் 2.4 கிலோ மீட்டர் நீளத்திலும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 2241 மீட்டர் நீளத்திற்கு தார்சாலை பணி செய்து முடிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். இந்நிலையில் 2010 அக்டோபர் முதல் டிசம்பர் வரை பெய்த கனமழையினால் பாதிக்கப்பட்ட தெப்பக்குளம் வரையிலான (புவியூர் சானல் கரை முதல் எட்டுக்கூட்டு தேரிவிளை சாலையின் ஒரு பகுதி) சாலை 850 மீட்டர் நீளத்திற்கு மேற்கொள்ள நிரந்தரமாக சீர்செய்ய மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டதாகவும், ஆனால் 700 மீட்டர் நீளமுள்ள சாலை பணிக்கு மட்டுமே மதிப்பீடு ரூ.5.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்குள் சீரமைக்க ஒரு அடிக்கு ஜல்லி தளம் அமைத்து இச்சாலைப்பணி 18.04.2011–ல் முடிக்கப்பட்டதாகவும், 18.11.2011 முதல் 28.11.2011 வரை பெய்த அதிக அளவு மழையினால் இச்சாலை பழுதடைந்ததனால் இச்சாலையின் 260 மீட்டர் மட்டும் மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டதாகவும் வேலைகள் முழுவதும் மேலதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு மேல் அளவுகள் எடுக்கப்பட்டு அரசு ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்டு இச்சாலை பணி முடிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் முறைகேடு மற்றும் நிதி இழப்பு ஏதும் இல்லை என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேலும், இச்சாலை சம்பந்தப்பட்ட பணியை 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6 (4)–ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி தலஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு முறைமன்ற நடுவத்தினால் ஆணையிடப்பட்டது.

அவ்வகையில் நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது 18.08.2016 நாளிட்ட ஆய்வறிக்கையில் பொதுமக்களின் நலன் கருதி மேலே கூறப்பட்ட சாலை சுமார் 850 மீட்டர் அளவிற்கு பலத்த சேதமுற்றிருந்த காரணத்தால் இயற்கை இடர்பாடு நிதியாக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் நிர்வாக அனுமதியின் படி 5.20 இலட்சம் மதிப்பீட்டில் 700 மீட்டர் அளவிற்கு தற்காலிக சீரமைப்பு பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்ததை அடுத்து தற்காலிக சீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டது எனவும், 2011–ம் ஆண்டு பெய்த தீவிர பருவமழை காரணமாக சேதமடைந்து ,மீண்டும் சீரமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது எனவும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பொதுமக்களின் நலன் கருதி பருவமழை காலங்களில் சாலை சேதமுறுவதை தடுக்கவும் முக்கியமான இணைப்பு சாலையான இச்சாலைக்கு நிரந்தர தீர்வு காணும் பொருட்டு தற்காலிகமாக சீரமைக்கப்பட்ட 700 மீட்டர் சாலையில் கரையோர 260 மீட்டர் மட்டும் சேர்த்து 2012–2013 நபார்டு திட்டத்தில் சேர்த்து 2.40 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைப்பணி மேற்கொள்ளப்பட்டது என்ற விவரம் கண்டறியப்பட்டது எனவும் நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

மேற்கூறிய சூழ்நிலையில் ஊர் பொதுமக்களின் புகார் மனு குறித்து சம்பந்தப்பட்ட பணியை ஆய்வு செய்து சமர்ப்பிக்கப்பட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வு அறிக்கை, செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டதன் அடிப்படையிலும், மேலும் இப்புகார் மனுவில் பொதுவாக ஊர் பொதுமக்கள் என தெரிவிக்கப்பட்டு புகார் மனுவிற்குரிய ஆதாரமாக எந்த ஆவணங்களையும் சமர்ப்பிக்கப்படாத நிலையின் அடிப்படையிலும், புகார் மனு ஆதாரமற்றதாக உள்ளது என இம்முறைமன்றத்தால் முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே புகார் மனுவின் மீது எடுக்கப்படும் மேல் நடவடிக்கை கைவிடப்படுவதாக ஆணையிடப்படுகிறது.

2016-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 4–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

4/10/2016

செயலாளர்

பெறுநர்:

செயல் அலுவலர்,

தென்தாமரைக்குளம் பேரூராட்சி,

அகஸ்தீஸ்வரம் தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம்.